# தமிழ்நாடு தட்டச்சு கணினி பள்ளிகள்சங்கம்

(உருவாக்கம்-2015)

மாதரி தேர்வு - 2021 -தமிழ் இளநிலை.

நேரம்-10 நிமிடங்கள் மதிப்பெண்கள் - 100

கீழ்க்கண்டதை இரட்டை வரியில் அழகுற தட்டச்சு செய்க.

யாதும் ஊரே யாவரும் கேளிர். எதுவும் நமது ஊரே, எவரும் நமது உறவினரே என நம்மில் எத்தனை பேர் வாழ்கிறோம் என்பதுதான் இன்றைய கேள்வி. உறவுகளைப் பிரிந்து வாழும் குடும்பங்கள் எத்தனை என எண்ணிச் சொல்ல முடியாது. நாம் அன்றாம் தினசரி செய்தித் தாள்களில் சொத்துக்காக அண்ணன் தம்பி சண்டை. தந்தை கொலை செய்யப்பட்டார் என்ற மோசமான நிகழ்வுகள் நம் கண் முன்னே நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இதற்கு எல்லாம் யார் காரணம்? யாரை குறை சொல்வது? எதற்கும் பதில் இல்லை. காரணம் கூட்டுக் குடும்பம், பாசமான வாழ்க்கை எல்லாம் மறைந்து போனதுதான். நம் முன்னோர்கள் கூட்டாகத்தானே வாழ்ந்தார்கள். பண்டிகைக் காலங்களில் அந்த வீடுகளில் இருந்த கோலாகலம் எல்லாம் இன்றைக்கு காணாமல் போய்விட்டதே.

மனிதனுக்கு உறவுகளைவிட பணம் தான் முக்கியம் என்ற நிலை உருவாகிவிட்டது. போட்டி போட்டுக் கொண்டு பணத்தை சம்பாதிக்க நினைப்பவன் தன் சொந்தங்களை இழக்கிறான். பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதிக்கிறார்கள். இவர்கள் குடும்ப உறவுகளை இழக்கிறார்கள். குழந்தைகளுக்கு சிறு வயதில் காட்ட வேண்டிய பாசத்தை இழக்கிறார்கள். கொஞ்சி விளையாடும் வயதில் குழந்தைகளோடு விளையாட முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதற்கு எல்லாம் பணம் தான் முக்கியம் என்ற நிலை தான். வீடு விட்டு காடு செல்லும்போது உன் பிணத்தோடு பின்னால் வருவது உறவுகளும் நட்புகளும் மட்டுமே. சேர்த்து வைத்த கோடிகள் அல்ல என்பதை மனிதன் அறிவானா? பணத்தால் உறவுகளிடையே வருவது பகைதான். பணத்தை துணையாகக் கொண்டு வாழ்வதை விட பணமே லட்சியமாக வாழ்பவர்கள்தான் இன்றைக்கு அதிகம்.

தமிழ்நாடு தட்டச்சு-கணினி பள்ளிகள் சங்கம்
(ஸ்தாபிதம் 2015)

மாதிரி தேர்வு வினாத்தாள் தமிழ் இளநிலை

நேரம் - 45 நிமிடங்கள். மதிப்பெண் - 100

வினா எண். 1 மதிப்பெண்: 50

கீழ்க்கண்ட புள்ளிவிவரப் பட்டியலை தட்டச்சு செய்து கொடுக்க.

<u>காஞ்சி கூட்டுறவு பட்டுப் புடவைகள் சங்க செலவு விவரம்</u>

| | வருடம் | சம்பளம் | வட்டி | வரி கட்டியது | மின் கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாயில்) | | | | |
| | 2005-06 | 98,000 | 12,845 | 12,030 | 10,050 | |
| மா. | 2007-08 | 95,050 | 9,750 | ~~11,000~~ | 8,172 | இரு. |
| | 2006-07 | 87,036 | 8,325 | 10,130 | 8,296 | |
| 7 | 2008-09 | 89,377 | 9,125 | 9,750 | 9,359 | |
| 5 | 2009-10 | 90,100 | 8,950 | 11,130 | 10,127 | 9 |
| இரு. | 2010-11 | ~~93,425~~ | 7,129 | 12,235 | 7,467 | மா. |
| 2 | 2011-12 | 97,300 | 9,346 | 13,365 | 8,960 | |

(திருப்புக

வினா எண்: 2 மதிப்பெண்- 50

தமன்னா சகோதரர்கள் நிறுவனம்

(தங்க நகை உற்பத்தியாளர்கள்)

நீ. தொ. பே. எண்: 2855168

அ. பெ. எண்: 520 6½
~~மேலாண்~~, அந்தேரி
மும்பை 500 001.

க. எண்: 527/14

20 நவ. 2014 ½4

இரு. திருவாளர்கள் பிரபு ~~சகோதரர்கள்~~,
40 நந்திகோவில் தெரு,
5½ திருச்சிராப்பள்ளி 620 207.

அன்புடையீர்,

தாங்கள் எங்களோடு தொடர்பு கொண்டு பேசியதற்கிணங்க, நீ.
நாங்கள் இன்றைய தினம் விமான பார்சல் சேவை மூலமாக
தாங்கள் கேட்டுள்ள தங்க நகைகளை அனுப்பியுள்ளோம்.
பொருள் சேவை வரி முழுவதும் செலுத்தப்பட்டுவிட்டது.
மா. நீங்கள் அனுப்பிய ~~தொகை~~ முன் பணம் போக மீதியை
உடனே அனுப்பி வைக்கக் கோருகிறோம். விமானச் நீ.
நிலையத்தில் வரி செலுத்தப்பட்டுவிட்டதற்கான
ஆதாரங்களைக் காட்டி பார்சலை பெற்றுக் கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கிறோம். ~~ஏதேனும்~~ குறைபாடுகள் இரு.
காணப்பட்டால், உடனே எங்களை தொடர்பு கொள்ளவும்.

த. ந.,
தமன்னா.......க்காக,

(பரத்)
மேலாளர்.